செ.வெ.எண்.229 நாள்:06.04.2018

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ அவர்கள், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் ஆகியோர் திறந்து வைத்தார்கள். மேலும் தமிழ்நாடு பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்கள்.

**********

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா மற்றும் தமிழ்நாடு பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் கி.பாஸ்கர் அவர்கள் தலைமையில் இன்று (06.04.2018) நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ அவர்கள், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பல்கலைக்கழக வளாகத்தில் வி.ஜி.பி உலகத் தமிழ்ச்சங்கத்தின் மூலம் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையை திறந்து வைத்தார்கள். மேலும் தமிழ்நாடு பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்கள். இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

வான்புகழ் கொண்ட வள்ளுவருக்கு மேலும் புகழாரம் சூட்டும் வகையில் பல்கலைக்கழக வளாகத்தில் சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. திருவள்ளுவரின் புகழ் உலக அளவில் பரந்து விரிந்துள்ளது. வி.ஜி.பி. உலகத் தமிழ்ச்சங்க தலைவர் கலைமாமணி வி.ஜி.பி. சந்தோஷம் அவர்கள் திருவள்ளுவருக்கு உலகமெங்கும் சிலைகளை வைத்து புகழை பரப்பி வருகிறார்கள். தமிழ்நாடு பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான தடகளப் போட்டிகள் கடந்த இரண்டு தினங்களாக நடத்தப்பட்டு இன்று பரிசு வழங்கப்படுகிறது. இப்போட்டிகளில் 19 க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களை சேர்ந்த 250 வீரர் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர். கல்வியும், விளையாட்டும் இரண்டு தண்டவாளங்களை போன்றது. விளையாட்டு வீரர்கள் கல்வியிலும் சிறந்து விளங்குவார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளையாட்டு துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து ஊக்கப்படுத்தியதால் தமிழகம் விளையாட்டில் உலக அளவில் பதக்கம் பெற்று சாதனைகள் பல படைத்தது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து விளையாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். அரசு ஒலிம்பிக் மற்றும் உலக போட்டிகளில் பதக்கம் பெறும் வகையில் விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தி வருகிறது. திருநெல்வேலி சந்திநகர் பகுதியில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான 175 ஏக்கர் பரப்பளவில் ரூ.180 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு கிராமம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இங்கு ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 12.5 ஏக்கர் பரப்பில் நீச்சல் குளம் மற்றும் நீர் சாகசங்கள் பயிற்சி பகுதி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் சிறப்பாக வளர்ச்சியடைந்து வருகிறது. 87 உறுப்பு கல்லூரிகளை கொண்டுள்ள இது விரைவில் 100 உறுப்பு கல்லூரிகளை கொண்டு இந்தியாவின் சிறந்த் பல்கலைக்கழகமாக திகழும் என பேசினார்.

இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலிக்கு புகழ் சேர்க்கும் இந்த மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் தான் நான் இளங்கலைப் பட்டம் பெற்றேன். அதனால் தான் இப் பல்கலைக்கழகத்திற்கு வரும் போதல்லாம் தாய் வீட்டிற்கு செல்லும் மகிழ்ச்சி ஏற்படும். பல்கலைக்கழக வரலாற்றில் இது ஒரு பொன்நாள் ஆகும். தெய்வப்புலவர் திருவள்ளுவரின் சிலை திறந்து இருப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இரண்டே வரிகளில் 133 அதிகாரத்தில் 1330 குறள் மூலம் உலகத்தையே அளந்தவர் நம் திருவள்ளுவர் ஆவார். ஒரே புத்தகத்தில் கல்வி, கல்லாமை, ஒழுக்கம், பண்பு உடைமை, நன்றி, நட்பு, செல்வம், நாடு, இல்வாழ்க்கை, ஈகை, தவம், துறவு என்று எல்லவாற்றையும் சொன்ன உலகத்தின் மிகச் சிறந்த கவிஞர் திருவள்ளுவர். கல்லாதவர்களே இல்லாத மாநிலமாக தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்பதே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தாரக மந்திரமாகும். தமிழ்தாய் வாழ்த்தினை தந்த புகழ்பெற்ற மாமனிதர் சுந்தரம்பிள்ளை அவர்களின் பெயரை தாங்கிய இப் பல்கலைக்கழகம் பல்வேறு வகையிலும் சிறந்து இயங்கி வருகிறது.

இந்திய அளவில் உயர் கல்வியில் சிறந்து விளங்கும் மாநிலம் தமிழகமாகும். 2018 -19 ம் ஆண்டில் தமிழக அரசு உயர் கல்விக்காக ரூ.4620.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசின் திட்டங்களால் உயர் கல்வி பயில்வோரின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. புதிய புதிய கல்லூரிகளும், புதிய புதிய பாடங்களும் தொடங்கப்பட்டு உயர் கல்வியில் தமிழகம் சிகரத்தை தொட்டு உள்ளது. கல்வியை போன்றே விளையாட்டு துறைக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதியை அள்ளி கொடுத்தார்கள். விளையாட்டு வீரர்களுக்கு பல்வேறு சலுகைகளை தந்து ஊக்கப்படுத்தி கண்ணை இமை காப்பதை போல அம்மாவின் அரசு காத்து வருகிறது. விளையாட்டு மூலம் உடல் மட்டும் அல்லாது மனமும் சுத்தமாகிறது. ஓராண்டை பற்றி நீங்கள் சிந்தித்தால் நாட்டிற்காக ஒரு விதை நெல்லை நடுங்கள், பத்தாண்டுகளை பற்றி சிந்தித்தால் ஒரு மரத்தை நடுங்கள், நூறு ஆண்டுகளை பற்றி சிந்தித்தால் மக்களுக்கு தரமான கல்வியை சொல்லி தாருங்கள் என்பதை பதிவு செய்து உங்களிடமிருந்து விடைபெறுகிறேன். என பேசினார்.

தொடர்ந்து ஒட்டு மொத்த சம்பியன்சிப் சென்னை பல்கலைக்கழகத்திற்கு முதல் பரிசும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திற்கு இரண்டாம் பரிசும், பாரதியார் பல்கலைக்கழகம் மூன்றாம் பரிசும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு நான்காம் பரிசும், எஸ்.ஆர்.எம் பல்கலைகழகத்திற்கு ஐந்தாம் பரிசும் உட்பட பத்து பல்கலைக்கழகங்களுக்கு ரூ.4.50 லட்சம் மதிப்பிலான பரிசு, கேடயம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வி.ஜி.பி உலகத் தமிழ்ச்சங்க தலைவர் கலைமாமணி வி.ஜி.பி.சந்தோஷம், பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் சந்தோஷ்பாபு, மொழி புத முதல்வர் பேராசிரியர் ஸ்டீபன், முக்கிய பிரமுகர்கள் திரு.பரணி சங்கரலிங்கம், திரு.சுப்பையா பாண்டியன், திரு.ஆவின் ரமேஷ், திரு.ஆறுமுகம், திரு.ஜெரல்டு, திரு.மகபூப்ஜான், திரு.பல்லிக்கோட்டை செல்லத்துரை, பல்கலைக்கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.